# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 233/மா/2022**

**நாள் : 14.12.2022**

திரு. B. விஜயகுமார்,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–5, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், எண்.14/15, சால்ட் குறுக்கு தெருவில் வசிக்கும் திரு. B. விஜயகுமார் என்பவரின் 22.11.2022 நாளிட்ட மனு 23.11.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 233/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், எண்.14/15, சால்ட் குறுக்கு தெருவில் வசிக்கும் திரு. B. விஜயகுமார் என்பவரின் முறையீட்டு மனுவில்,

> “சென்னை, மண்டலம்-04, வார்டு – 41, B பிளாக், காமராஜர் சாலை, 5வது தெரு, கதவு எண்.17/18 என்ற இடத்தில் சென்னை மாநகராட்சியிடம் எந்த விதமான கட்டிட அனுமதியில்லாமல் திரு. ஈஸ்வர பாலன் என்பவர் மூன்று மாடி அனுமதியற்ற விதிமீறல் கட்டிடம் கட்டியது தொடர்பாக நான் பலமுறை புகார் அளித்தும் இதுவரை சென்னை மாநகராட்சி மண்டலம்-04ல் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. நான் அறிந்த வகையில் மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடத்தின் உரிமையாளர் அரசியல் பிரமுகர் மற்றும் உள்ளூர் செல்வாக்கு மிக்கவர் என்பதால் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் இலஞ்சம் பெற்றுக்கொண்டு மேற்கண்ட அனுமதியற்ற விதிமீறல் கட்டடம் மீது சட்டப்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறார்கள் என தெரிய வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியின் கடந்த 2022-23 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்படி ரூ.788.58 கோடி ரூபாய் பற்றாக்குறை பட்ஜெட் ஆக போடப்பட்டது. மேலும் பல நல்ல திட்டங்கள் நிதி இல்லாமல் நிலுவையில் உள்ளது. இந்நிலையில் அனுமதியற்ற விதிமீறல் கட்டிடங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு உரிய

தொகைகளை வசூலித்தால் சென்னை பெருநகர மாநகராட்சியின் நிதிநிலைமை சீராகும். இந்த புகார் தொடர்பாக நான் ஏற்கனவே முதலமைச்சர் தனிப்பிரிவு புகார் எண்.2021/1170533/DJ நாள்:12.03.2021 மற்றும் புகார் எண்.2021/11211932/IAS நாள்:09.06.2021 மூலம் மேற்கண்ட அலுவலருக்கு புகார் அனுப்பியும் அவர் தற்போது வரை எந்த உறுதியான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, இத்துடன் நான் மாநகராட்சி அதிகாரிக்கு அனுப்பிய எனது மனு மற்றும் ஆவணங்களின் நகல்கள் இணைத்து அனுப்பியுள்ளேன். ஆகவே உயர்திரு. ஐயா அவர்கள் எனது புகார் மனுவை கோப்பில் எடுத்து விசாரணை செய்து மேற்கண்ட அனுமதியற்ற விதிமீறல் கட்டிடம் மீதும், அதன் மீது தற்போது வரை நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீதும், சட்டப்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென தங்களை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 06.12.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 26.12.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 06.12.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

“பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4, காமராஜர் சாலை 5வது தெரு, கதவு எண் 17/18 என்கின்ற இடத்தில் அனுமதியில்லாமல் மூன்று மாடி கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட மாநகராட்சியின் அனுமதியற்ற கட்டடம் குறித்து சென்னை மாநகராட்சி மண்டலம்-4க்கு புகார் மனுக்கள் அனுப்பப்பட்டும், மாநகராட்சி அலுவலர்கள் கையூட்டு பெற்றுக்கொண்டு மேற்கண்ட விதிகளை மீறி கட்டப்பட்டுள்ள கட்டடம் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துள்ளனர். எனவே கட்டட அனுமதி பெறாமல் கட்டப்பட்ட மேற்கண்ட கட்டடத்தின் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும், விதிகளை மீறி கட்டப்பட்டுள்ள கட்டடம் கட்டும்வரை கண்டும் காணாமலும் இருந்த சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் இளநிலைப் பொறியாளர் 06.12.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர் :**

“மனுதாரர் தெரிவித்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4 காமராஜர் சாலை 5வது தெரு, கதவு எண் 17/18 என்கின்ற இடத்தில் அமைந்துள்ள மாநகராட்சியின் அனுமதியற்ற கட்டடத்திற்கு கடந்த 03.2.2021 அன்று “Stop Work” நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் 03/03/2021 அன்று “Lock and Seal Notice”ம் மற்றும் 15.04.2021 அன்று “De-occupation Notice”ம் அனுப்பப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். De-occupation Notice ஐ தொடர்ந்து கட்டிடத்திற்கு சீல் வைக்க சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையரிடம் ஆணை

பெறப்பட்டு உரிய தொடர் நட்வடிக்கை எடுக்கப்படும் என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், மண்டலம்-4ன் இளநிலைப் பொறியாளர் அவர்களின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.

மனுதாரர், மண்டலம் -4, காமராஜர் சாலை, 5வது தெரு, கதவு எண்.17/18ல் அனுமதியில்லாமல் மூன்று மாடி கட்டடம் கட்டப்பட்டுள்ளது எனவும், அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளார்.

மண்டலம்-4,காமராஜர் சாலை, 5வது தெருவில் கதவு எண்.17/18ல் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதியில்லாமல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது என்பது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் மூலம் அறியமுடிகிறது. மேலும், அக்கட்டடத்தின் உரிமையாளருக்கு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் அலுவலர்களால் 3.2.2021 அன்று "Stop Work Notice"-ம், 3.3.2021 அன்று "Lock and Seal Notice" -ம், 15.4.2021 அன்று "De-Occupation Notice"ம் வழங்கப்பட்டுள்ளது எனவும் அறியமுடிகிறது.

**மேற்கண்டச் சூழ்நிலையில், இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது:**

"Chennai City Municipal Corporation Act, 1919, பிரிவு 222ல் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் குறித்த விதிகளில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:-

**<u>Removal of encroachment:</u>** (1) The Commissioner may by notice require the owner or occupier of any premises to remove or alter any projection, encroachment or obstruction (other than a door, gate, bar or ground-floor window) situated against or in front of such premises and in or over, any street.

மேலே குறிப்பிட்டுள்ள விதிகளின்படி நடவடிக்கை எடுக்காமல் இருந்த மண்டலம்-4ன் அலுவலர்களின் செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது ஆகும். மேலும், இந்நேர்வில் குறிப்பிட்டுள்ள அனுமதியற்ற கட்டடத்திற்கு 2021 ஆண்டு Noticeகள் வழங்கப்பட்டு அதன்பிறகு, இம்முறைமன்ற விசாரணை நாள் வரை எந்தவித சட்டபூர்வமான தொடர் நடவடிக்கை எடுக்காததற்கு மண்டலம்-4ன் அலுவலர்களின் மெத்தனபோக்கே காரணம் என்று இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. சம்பந்தப்பட்ட அனைத்து கள அலுவலர்கள் மற்றும் உதவி ஆணையாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகிறது.

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் இளநிலைப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மேற்கண்ட அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டடத்திற்கு, De-Occupation Notice-ஐ தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் ஆணை பெற்று, Demolition அறிவிப்பு அளித்து உரிய சட்டபூர்வமான தொடர் நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் மண்டல அலுவலருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

The Commissioner, Greater Chennai Corporation is directed to take disciplinary action against the field officials who failed to proceed further after issue of de-occupation notice on 15.4.2021. The final stage of demolition notice should have been issued as a natural sequence after observance of procedure as per rules. The Zonal officer should have a ready list of such cases and appropriate stages of action should have been gone through scrupulously in order to avoid complaints of this kind. This silence for nearly 19 months, does not speak well of the zonal officials concerned, right from the Assistant Commissioner.

2022–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. B. விஜயகுமார்,
   14/15, சால்ட் குறுக்கு தெரு,
   துர்கா தேவி நகர்,
   தண்டையார்பேட்டை, சென்னை – 600 081.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. துணை ஆணையர், (பணிகள்)
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
   } *He is requested to ensure the implementation of this order*
4. மண்டல அலுவலர், (அவரது பிரதிநிதி),
   மண்டலம்–4, பெருநகர சென்னை மாநகராட்சி,
   266, திருவெற்றியூர் நெடுஞ்சாலை,
   பழைய வண்ணாரப்பேட்டை,
   சென்னை – 600 021. (w.e.).
5. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை,
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

14/12/22

செயலாளர்.

16/12/22 3/10

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
சென்னை-600 032